பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

19 08 2026 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களுக்குரிய பலன்கள் சென்றடையும் வகையில், தரவுகளை உருவாக்குவதில் இந்திய புள்ளியியல் பணி அதிகாரிகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்றிரவு சென்னை வருகிறார்.

3. அரசுப் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

4. செங்கல்பட்டு உள்ளிட்ட மூன்று மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சேப்பாக் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மக்களுக்குரிய பலன்கள் சென்றடையும் வகையில், தரவு சார்ந்த அமைப்பை உருவாக்குவதில் இந்திய புள்ளியியல் சேவை அதிகாரிகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று குடியரசு துணைத்தலைவர் மாளிகையில் இந்திய புள்ளியியல் பணி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் என்பவை அறிக்கைகள் மற்றும் அட்டவணைகளைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க தகவல்களை அளிக்கக் கூடியவை என்று அவர் கூறினார்.

இப்பணியில் துல்லியமான, கள நிலவரங்கள் குறித்த ஆழமான புரிதலுடன் இந்தத் துறை அதிகாரிகள் அணுக வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நம்பகமான புள்ளிவிவரங்களே சிறந்த கொள்கை உருவாக்கம் மற்றும் திறமையான நிர்வாகத்திற்கு அடித்தளமாக அமைவதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்றிரவு சென்னை வருகிறார்.

சென்னையை அடுத்த கோவளத்தில் தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்துகொள்ளும் மாநாடு திரு. அமித் ஷா தலைமையில் நாளை நடைபெற உள்ளது.

இதற்காக இன்றிரவு தனி விமானத்தில் திரு. அமித் ஷா வர இருப்பதையொட்டி சென்னை விமான நிலையம், கோவளம் உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சருக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் விமான நிலைய வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

காவல்துறை உயரதிகாரிகள், விமான நிலைய உயரதிகாரிகள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

விமான நிலையத்தில் இருந்து கோவளம் வரை சாலை மார்க்கமாக உள்துறை அமைச்சர் பயணிப்பதால் சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது குறித்தும் இந்தக் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அரசுப் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே அரசுப் பள்ளியில் கிருமிநாசினி கலந்த குடிநீரை அருந்திய 18க்கும் மேற்பட்ட மாணவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாணவர்களின் உயிருடன் விளையாடும் தவெக அரசின் இத்தகைய மெத்தனப் போக்கை கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசு வெற்று விளம்பரங்களைத் தவிர்த்து, இந்த சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுடன் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மதுரை மீனாட்சியம்மன் - சுந்தரேஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 17ஆம் தேதி நடைபெற உள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு செய்ய வேண்டிய ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் நேற்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Raguraja – 52 Sec)

**<<<<>>>>**

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோரப் பகுதிகளில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக திருவள்ளூர், சென்னை, அரியலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, தேனி ஆகிய மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இன்று மாலை அல்லது இரவு நேரங்களில் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இதற்கிடையே நெல்லை மாவட்டத்தில் இன்றும், நாளையும் கடல் சீற்றத்துடன் காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Kumar – 42 Sec)

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

சண்டைநிறுத்த ஒப்பந்தத்திற்கு ஈரான் உடன்படும் வரை பேச்சுவார்த்தையை நிறுத்தி வைக்குமாறு அமெரிக்க குழுவினரை தாம் கேட்டுக்கொண்டிருப்பதாக அந்நாட்டு அதிபர் டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

------------

சிரியாவின் வடமேற்கு மாகாணமான Idlib பகுதியில் உள்ள விமானப் படைத்தளத்தின் மீது இஸ்ரேல் வான்வெளித் தாக்குதல் நடத்தியுள்ளது.

------------

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய முகமது யாகூப் உள்ளிட்ட 3 பேருக்கு எதிராக ஜாமீனில் வெளிவர முடியாத பிடி ஆணையை ஜம்மு-கஷ்மீர் NIA நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

------------

இந்தியாவில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளுமாறு ஜப்பான் தொழிலதிபர்களுக்கு மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அழைப்பு விடுத்துள்ளார்.

------------

குழந்தைகள் தொடர்பான பாலியல் பதிவுகளை வெளியிட்டு விதிமீறலில் ஈடுபட்டால் Meta நிறுவனத்திற்கு சட்டப் பாதுகாப்பு நீக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது.

------------

ஜார்கண்ட் மாநிலத்தில் முறைகேடுகள் காரணமாக, ரத்து செய்யப்பட்ட 44 தேர்வுகள் குறித்த பட்டியலை அம்மாநில அரசு வெளியிட்டுள்ளது.

------------

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே குப்பைக் கிடங்கில் பற்றிய தீயை பல மணி நேரம் போராடி தீயணைப்புத் துறையினர் கட்டுப்படுத்தினர்.

------------

அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் போதையில்லா தமிழகம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம், மாவட்ட ஆட்சியர் திருமதி மிருனாளினி தலைமையில் நடைபெற்றது.

------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் சுற்றுலாப் பேருந்து மோதிய விபத்தில் இரவுக் காவலர் ஒருவர் உயிரிழந்தார்.

------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகளை கண்காணிக்க 15 அதிகாரிகளை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் நியமித்துள்ளார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சேப்பாக் அணியை வென்றது.

சேப்பாக்கில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய சேப்பாக் அணி 19 புள்ளி 3 ஓவரில் 167 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

168 ரன் என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய கோவை அணி 18 புள்ளி 5 ஓவரிலேயே 5 விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்றிரவு மணி 7.30க்கு நடைபெறும் ஆட்டத்தில் திண்டுக்கல் அணி - திருச்சி அணியை எதிர்கொள்கிறது.

---------------

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்திய மகளிர் அணி - தென்னாப்பிரிக்க அணியை 6-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

நெதர்லாந்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணி இடம்பெற்றுள்ள டி பிரிவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இதனிடையே இந்திய ஆடவர் அணி இன்று நடைபெறும் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

------------

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷ்யா சென் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இவர், ஆஸ்திரேலியாவின் Collin's Filimon-ஐ 16-21, 21-8, 21-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

மகளிர் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**<<<<>>>>**